**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.2/2024 இன்**

**அசல் வழக்கு எண்.49/2020**

1) ராஜேஸ்வரி

2) பெருமாள் சுந்தரி

3) மாரியம்மாள்

4) சுசீலா

5) வசந்தா .... மனுதாரர்கள்/வாதிகள்

// எதிர் //

1) மாசானம்

2) தடிவீரன் (இறப்பு)

3) செல்வபாண்டியன்

4) அந்தோணி ஜெகன்

(4 ம் பிரதிவாதி தனது அதிகார முகவரான 3 ம் பிரதிவாதியான செல்வபாண்டியன் மூலம்)

5) காஜா உதுமான்

6) சுனிதா சாமுவேல்

7) வள்ளியம்மாள்

8) முருகன்

9) ராஜன்

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:17 +0530

10) சுந்தரம் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

11) வே.பண்டாரத்தி .... எதிர்மனுதாரர்/உத்தேச 11ம் பிரதிவாதி

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 19.09.2025 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. த. வேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 11ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.S. சுரேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 5 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## உத்தரவு

இம்மனுவானது, 11ம் எதிர்மனுதாரர்/உத்தேச 11ம் பிரதிவாதியை, அசல் வழக்கில் 11ம் பிரதிவாதியாக தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 சி.பி.சி.-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி என்றும், மனுதாரரின் தாத்தா வேலுக்குட்டிக்கு தனது தகப்பனாரான 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியான அவரது



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:23 +0530

சகோதரர் தடிவீரனும் 1ம், 2ம் பிரதிவாதிகளின் சகோதரி பண்டாரத்தி ஆகிய மூவரும் மக்களாவர் என்றும், மேற்படி பண்டாரத்தியை எங்கள் ஊருக்கு அருகில் உள்ள சிவந்திபட்டியில் திருமணம் செய்து கொடுத்து இருக்கும் நிலையில், தபசில் சொத்துக்களை தாங்களும், 2ம் பிரதிவாதியும் மட்டுமே ஆண்டனுபவித்து வந்தோம் என்றும், அதனடிப்படையில் தபசில் சொத்து தங்களுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் மட்டுமே பாத்தியதை உண்டு என்று தவறாக கருதியதன் அடிப்படையில் அசல் வழக்கை தாக்கல் செய்யும் போது 1/2 பாகம் என்ற அடிப்படையில் தவறுதலாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விட்டது என்றும், இது வேண்டுமென்றே நிகழ்ந்த தவறல்ல என்றும், பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்த பின்னர் தங்கள் வழக்கறிஞர் தங்களுக்கு தெரிவித்த பிறகே மேற்படி பண்டாரத்திற்கும் தபசில் சொத்துகளில் பங்கு உரிமை உண்டு என்பதை தாங்கள் அறிந்து கொண்டோம் என்றும், ஆகவே அசல் வழக்கில் மேற்படி பண்டாரத்தியை 8வது பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது சட்டப்படி கட்டாயமாக உள்ளது என்றும், அவ்விதம் மேற்படி பண்டாரத்தியை அசல் வழக்கில் கட்சி சேர்க்காவிடில் அசல் வழக்கின் நோக்கமே தவறாக போய்விடும் என்றும், அதனால் வாதியான தங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்புகள் ஏற்பட்டுவிடும் என்றும், ஆகவே அசல் வழக்கில் மேற்படி 8வது எதிர்மனுதாரர்/11வது உத்தேச பிரதிவாதியை, 11வது பிரதிவாதியாக கட்சி சேர்க்க அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:28 +0530

**3) <u>7 முதல் 11 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மேற்படி 11 வது உத்தேச பிரதிவாதியான பண்டாரத்தி என்பவர் மனுதாரர்கள்/வாதிகளுக்கு அத்தை உறவுமுறை ஆகும் என்றும், மேற்படி 1, 2 பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களின் உடன்பிறந்த சகோதரி ஆவார் என்றும், பண்டாரத்தி என்பவரின் பாகத்தை பொறுத்து வேண்டுமென்றே சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கில் கட்சி சேர்க்காமல் இருந்துவிட்டனர் என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி பண்டாரத்தி என்பவர் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சி ஆவார் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்திலேயே கூறியுள்ளனர் என்றும், தற்போது பல ஆண்டுகளுக்கு பின் மேற்படி பண்டாரத்தி அவசிய தரப்பினர் என்று 11 வது உத்தேச பிரதிவாதி என்றும் மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றும், இவ்வழக்கானது தற்போது பட்டியலிடப்பட்ட வழக்காகும் என்றும், இவ்வழக்கினை காலம் கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:34 +0530

**4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

11ம் எதிர்மனுதாரர்/உத்தேச 11ம் பிரதிவாதியை, அசல் வழக்கில் 11ம் பிரதிவாதியாக தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில், பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்த பின்னர் தங்கள் வழக்கறிஞர் தங்களுக்கு தெரிவித்த பிறகே மேற்படி பண்டாரத்திற்கும் தபசில் சொத்துகளில் பங்கு உரிமை உண்டு என்பதை தாங்கள் அறிந்து கொண்டோம் என்றும், ஆகவே அசல் வழக்கில் மேற்படி பண்டாரத்தியை 8 வது பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது சட்டப்படி கட்டாயமாக உள்ளது என்றும், அவ்விதம் மேற்படி பண்டாரத்தியை அசல் வழக்கில் கட்சி சேர்க்காவிடில் அசல் வழக்கின் நோக்கமே தவறாக போய்விடும் என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**6)** 7 முதல் 11ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், பண்டாரத்தி என்பவரின் பாகத்தை பொறுத்து வேண்டுமென்றே சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கில் கட்சி சேர்க்காமல் இருந்துவிட்டனர் என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி பண்டாரத்தி என்பவர் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சி ஆவார் என்று

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2025.12.16 17:15:40 +0530

எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்திலேயே கூறியுள்ளனர் என்றும், தற்போது பல ஆண்டுகளுக்கு பின் மேற்படி பண்டாரத்தி அவசிய தரப்பினர் என்று 11வது உத்தேச பிரதிவாதி என்றும் மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றும், இவ்வழக்கினை காலம் கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிடப்பட்டது.

7) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால், வழக்குரை சொத்துக்களில் பாகம் கேட்டும், 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 19.10.2006ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என்றும், 1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 11.05.2007ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என்றும், 2, 4ம் பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 14.05.2012ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என்றும், 3, 4 ம் பிரதிவாதிகள், 7 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 14.05.2017 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என்றும் விளம்புகை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு வாதிகள் தரப்பில் விசாரணைக்காக போடப்பட்டு, வா.சா.1 விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில், பண்டாரத்தி என்பவரை அசல் வழக்கில் கூடுதல் பிரதிவாதியாக சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:45 +0530

**8)** அசல் வழக்கானது, மனுதாரர்களின் தகப்பனாரின் தகப்பனாருக்கு அதாவது மனுதாரர்களின் தாத்தாக்கு வேலுகுட்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலுகுட்டி என்பவருக்கு மனுதாரர்களின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி, பண்டாரத்தி ஆகியோர்கள் மக்கள் என்றும், மேற்கண்ட பண்டாரத்தி என்பவரை மனுதாரர்களின் ஊருக்கு அருகிலுள்ள சிவந்திபட்டியில் திருமணம் செய்து கொடுத்துள்ள நிலையில், வழக்குரை சொத்துக்களை மனுதாரர்களும், 1, 2 பிரதிவாதிகளும் மட்டுமே ஆண்டு அனுபவித்து வந்ததால், தங்களுக்கும் 2ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியதை உண்டு என தவறாக கருதி, அசல் வழக்கை தாக்கல் செய்யும்போது ½ பாகம் கேட்கப்பட்டுவிட்டது என்றும், பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்புதான் மேற்கண்ட பண்டாரத்திக்கும், வழக்குரை சொத்தில் பங்கு உரிமை உண்டு என்பதை தாங்கள் அறிந்து கொண்டதாகவும் மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

**9)** அசல் வழக்கு பாகம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவசியமான தரப்பினர்கள் அனைவரையும் வழக்கில் சேர்க்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். வழக்குரை சொத்தில் தங்களது தந்தையின் சகோதரியான பண்டாரத்தி என்பவருக்கும் உரிமை உள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லியிருக்கும் நிலையில், அவரை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பது அவசியமானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்கள் மனுவில் கூறியிருக்கும்



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:50 +0530

காரணங்களை கருத்திற் கொண்டும், மனுதாரர்களுக்கு தங்களது வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10)** முடிவாக, 11ம் எதிர்மனுதாரர்/உத்தேச 11ம் பிரதிவாதியை, அசல் வழக்கில் 11ம் பிரதிவாதியாக தரப்பினராக சேர்க்கலாம் என இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:15:56 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.16 17:16:02 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நான்குநேரி

இ.ம.எண்.2/2024 இன்

அ.வ.எண்.49/2020

நேரிய / வரைவு உத்தரவு

நாள் - 16.12.2025